<u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>

**OS** 06/2009

2024-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் நாள் Pw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திருமதி.கே.கிருஷ்ணபிரியா, எம்.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் 01.04.2024

Pw1 ( பூபதி )

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**<u>3 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

முதலில் இந்த வழக்கு அ வ எண் 184/2004 ஆக இந்த வழக்கை ஈரோடு மாவட்ட நீதிமன்றத்தில் விடுமுறைகாலத்தில் தாக்கல் செய்து, அந்த வழக்கு ஈரோடு முதலாம் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து பின்னிட்டு இந்நீதிமன்றத்திற்கு ஆள்வரை காரணமாக மாற்றம் செய்து தற்போது நடந்து வருகிறது என்றால் சரி. இந்த வழக்கில் 1 ம் வாதி என் தகப்பனார் என்றால் சரி. நான் 4 ம் வாதி என்றால் சரி. 2 ,3,5,6 மற்றும் 7 ம் வாதிகள் என் உடன்பிறந்தவர்கள் என்றால் சரி. 6 ம் வாதி சகாதேவன் திருமணமாகாமல் இறந்து விட்டர்ர் என்றால் சரி. 1 ம் பிரதிவாதி எங்களுடைய பொதுஅதிகார முகவர் என்றும், 2,3 பிரதிவாதிகள் 1 ம் பிரதிவாதியிடம் கிரயம் பெற்ற கிரய தாரர்கள் என்றால் ஆமாம், எங்களுக்கு தெரியாமல் போலியாக கிரயம் கொடுத்துள்ளார். பொது அதிகாரம் கொடுக்கப்பட்ட தேதி தெரியுமா என்றால் 17.08.1998 ஆகும்., மேற்படி தேதியில் வாதிகளாகிய நாங்கள் அனைவரும் சேர்ந்து தான் 1 ம் பிரதிவாதிக்கு பொது அதிகாரம் எழுதிக் கொடுத்துள்ளோம் என்றால் ஆமாம். வாசாஆ 2 பொது அதிகார பத்திர சொத்து விவரத்தில் அளவுகள் குறிப்பிட்டு, நான்கு எல்லைகள் குறிப்பிட்டு மொத்தம் 40 சென்ட்க்கு பொதுஅதிகார பத்திரம் எழுதி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அந்த பொது அதிகார பத்திர சான்றிட்ட நகல் தான் தற்போது என்னிடம் காண்பிக்கப்படுவது என்றால் சரி. மேற்படி வாசாஆ 2 சொத்து விவரத்தில் " குன்னத்தூர் ரோடு மார்சினிலிருந்து 20 அடி அகலத்தில் இது பாக பூமி தென்புற அத்து வரை விடப்பட்டுள்ள 20 அடி அகல தென்வடல்பொதுத் தடத்தில் வண்டி வாகனாதிகள் ஓட்டிக் கொள்ளவும், நடந்து கொள்ளவும் உண்டான மாமூல் பொது தட வழி பாத்தியம் சகிதம் சேர்த்து நாளது தேதி இது பொது அதிகார ஆவணத்திற்கு கட்டுப்பட்டு " என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம், ஆனால் அது போலியாக

குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு போலியாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று நான் எனது வாதுரையிலோ, சாட்சிய பிரமாண வாக்குமூலத்திலோ குறிப்பிடவில்லை என்றால் பத்திரத்தில அந்த வாசகம் உள்ளது, ஆனால் நாங்கள் அதை பரிவர்தனை செய்யும் நோக்கதில் எழுதி கொடுக்கவில்லை, ஆனால் அவ்வாறு வாசகம் உள்ளது. நான் என்ன படித்துள்ளேன் என்றால் +2 படித்துள்ளேன். வாசாஆ 2 சொத்து விவரத்தில் கட்டிடம் இருப்பதாகவோ போர்வெல் இருப்பதாகவோ கண்டு எழுதப்படவில்லை என்றும், காலி இடமாக தான் எழுதப்பட்டுள்ளது என்றால் சரி. மேற்படி சொத்து எங்களுக்கு பூர்வீக சொத்து என்றால் சரி. என் அப்பா உயிருடன் இருந்தவரை அவர் தான் குடும்ப தலைவராக இருந்தார் என்றால் சரி. சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வரவு செலவு மற்றும் குடும்ப வரவு செலவுகைள அவர் தான் நிர்வகித்து வந்தார் என்றால் சரி. இந்த வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் நாங்கள் அனைவரும் நல்லாம்பட்டியில் குடியிருந்தோம் என்றால் சரியல்ல, பெருந்துறையில் தான் குடியிருந்தோம். வழக்கு பிராதில் 1,2,5,6,7 வாதிகள் நல்லாம்பட்டியில் குடியிருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் என் அண்ணன் 2ம் வாதி கார்த்திகேயன் மட்டும் தான் நல்லாம்பட்டியில் குடியிருந்தார். இந்த சொத்து சம்பந்தமாக விற்பனை செய்வது, கடன் வாங்குவது போன்றவற்றை என் அப்பா உயிருடன் இருந்த சமயத்தில் அவர் தான் முடிவு செய்வார் என்றால் சரி. 1ம் பிரதிவாதி எங்கள் உறவினர் என்றால் ஆமாம், தூரத்து உறவு. 2,3 பிரதிவாதிகள் வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரி. 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கிடையே எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல, மூவரும் சேர்ந்து தான் பைனான்ஸ் தொழில் செய்கிறார்கள். அவ்வாறு அவர் தொழில் செய்கிறார் என்பதை காண்பிக்க முகவரி எதுவும் உள்ளதா என்றால் அவர் வீட்டில் வைத்து தான் செய்கிறார்கள், முகவரி இல்லை. முதலில் 1ம் பிரதிவாதி 2,3 பிரதிவாதிகள் பெயரில் கூட்டாக கிரயம் கொடுத்தார் என்றால் ஆமாம், அவர்களாகவே அவ்வாறு எழுதிக் கொண்டுள்ளார்கள். பின்னிட்டு 2ம் பிரதிவாதி அவருடைய பாதி பங்கை 3ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்துள்ளார்கள் என்றால் அவர்களாகவே உறவினர்கள் என்பதால் அவ்வாறு மாற்றியுள்ளார்கள். வாசாஆ 2 பொது அதிகார பத்திரத்தில் ல் உள்ள அதே சொத்து விவரம் தான் வாசாஆ 3 மற்றும் 4 கிரய பத்திரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. மேற்படி வாசாஆ 3 மற்றும் 4 கிரய பத்திரங்களிலும் காலி இடமாக தான் கிரயம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். 3,4 பிரதிவாதிகள் பெயரிலுள்ள கிரயத்தை எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் 2001ம் ஆண்டு சாட்சி முதலில் ஜீன் மாதம் என்று சொன்னார்,பின்னர் ஜனவரி மாதம் தெரிந்து கொண்டதாக சொன்னார். 2ம் கிரயம் எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் 2002ம்

ஆண்டு கடைசியில் தெரிந்து கொண்டேன். அவ்வாறு இந்த கிரயங்கள் பற்றி தெரிந்த உடன் காவல் நிலையத்தில புகார் கொடுக்கவில்லை என்றால் ஆமாம். உடனடியாக வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம், 2003 ம் ஆண்டு வழக்கு தாக்கல் செய்தேன். 2004 ம் ஆண்டு விடுமுறை கால நீதிமன்றத்தில் 06.05.2004 ல் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சுவாதீனத்தை இடைஞ்சல் செய்ததாக சொல்லியுள்ளேன், எப்போது செய்தார்கள் என்றால் 2003 ம் ஆண்டு தேதி ஞாபகமில்லை. வழக்கில் 05.05.2003 ம் தேதி இடைஞ்சல் செய்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரி. அதற்கு பின்னிட்டு ஒரு ஆண்டு கழித்து தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அப்போதே தாக்கல் செய்துள்ளேன்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

Sd/-K.Krishnapriya,1.4.24
Subordinate Judge,
Perundurai.

uploaded by SS